2026 மார்ச் மாதம் 06– ஆம் தேதி வெள்ளிக்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 136/2025

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06– ஆம் தேதி வெள்ளிக்கிழமை திருமதி.L.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW4 – பாண்டியம்மாள் |
| கணவர் பெயர்: | ராஜேந்திரன் |
| ஊர்: | மாரியம்மன்கோவில்பட்டி |
| வட்டம்: | போடிநாயக்கனூர் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | கூலிவேலை |
| வயது : | 58 |

06.03.2026

(எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர். 5 வது எதிரி ஆஜர் இல்லை, பிரிவு 355 BNSS –ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அடையாளம் காணப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்சமயம் தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் தாலுகா, மாரியம்மன்கோவில்பட்டியில் வசித்து வருகிறேன். நான் கூலிவேலை செய்து வருகிறேன். இறந்துபோன பால்பாண்டி என்னுடன் பிறந்த தம்பியாவார். அவர் பால்வியாபாரம் செய்து வந்தார். ஆஜர் எதிரி ராஜாவை மட்டும் தெரியும். மற்றவர்களை தெரியாது. ராஜா என்பவரிடம் எனது தம்பி ரூ.2 லட்சம் பணம் கடனாக வாங்கியிருப்தாக எனது தம்பி என்னிடம் சொன்னார். ரூ.2 லட்சம் ரூபாயை திருப்பி செலுத்திவிட்ட பின்னரும் வட்டிக் கேட்டு ராஜா தொல்லை செய்ததாக எனது தம்பி பால்பாண்டி என்னிடம் கூறினார்.

2. பால்பாண்டி இறப்பதற்கு சுமார் ஒரு மாதத்திற்கு முன்பு ராஜா என்பவர் எனது தம்பி பால்பாண்டியை வீட்டின் அருகே உள்ள குளக்கரையில் வைத்து பணம் கொடுக்கல் வாங்கல் பிரச்சனை காரணமாக அடித்ததாக என்னிடம் பால்பாண்டி என்னிடம் சொன்னார். அதன்பின்னர் 10 நாட்கள் கழித்து நான் வேலைக்கு சென்றுவிட்டு, இரவு 1 மணிக்கு வீட்டிற்கு வந்தபோது, எனது கணவர் என்னிடம் அதற்கு முன்தினம் ராஜா எங்கள் வீட்டிற்கு வந்து, ராஜா எனது கணவரிடம் எனக்கும் பால்பாண்டிக்கும் உள்ள பிரச்சனையை பேசி தீர்த்துக்கொள்ளும்படி எனது கணவர் ராஜேந்திரனிடம் கூறியதாக எனது கணவர் என்னிடம் கூறினார். இரவு நேரமாகிவிட்டதால் காலையில் பேசிக்கொள்ளலாம் என்று சொல்லி எனது கணவர் ராஜாவிடம் சொல்லிவிட்டார்.

3. மறுநாள் காலையில் ராஜா வந்து, எதுவாக இருந்தாலும், இப்போதே பேசிவிடுங்கள் என்று ராஜா கூறியவுடன், பால்பாண்டியிடம் கேட்டப்போது, அவர் பணத்தை ராஜாவிடம் கொடுத்து முடித்துவிட்டதாக கூறினார். அதற்கு எனது கணவர் பேசி முடித்துக்கொள்ளலாம் என்று கூறினார். அதற்குள் ராஜா அவர் வீட்டிற்கு அலைப்பேசி மூலம் தகவல் சொல்லி, ராஜாவின் வீட்டிலிருந்து ராஜாவின் அண்ணனும், ராஜாவின் மகனும் வந்து, ராஜாவை அவரது வீட்டிற்கு அழைத்து சென்றுவிட்டார்கள்.

4. அதன்பின்னர் 10 நாட்கள் கழித்து ராஜா பால்பாண்டிக்கு ரூ.80 லட்சம் கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார். அதன்பின்னர் பால்பாண்டிக்கு மன உளைச்சல் ஆகிவிட்டது. மிகவும் மன உளைச்சலுக்கு ஆளாகி அடிக்கடி வந்து, அழுதுக்கொண்டு எங்களிடம் கடனை கொடுத்துவிட்டதாகவும், பணத்தை பெற்றுக்கொண்டு இவ்வாறு வழக்கறிஞர் அறிவிப்பை அனுப்பியுள்ளதாக கூறி வருத்தப்படுவார். தொடர்ந்து மன அழுத்தத்தில் இருந்துவந்தார். இரண்டு மாதங்கள் கழித்து மருந்து குடித்துவிட்டார்.

5. நான் அப்போது மில்லில் வேலை செய்துக்கொண்டிருந்தேன். அவர் இறந்தப்பின்னர் தான் எனக்கு தகவல் கிடைத்தது. எனது தம்பியின் மனைவி

என்னுடன் வேலை பார்த்துக்கொண்டிருந்தார், அவர் என்னிடம் தகவல் சொன்னார். நான் காலையில் மருத்துவமனைக்கு சென்றேன், அப்போது எனது தம்பி இறந்திருந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள். நான் நடந்த சம்பவத்தை சொன்னேன்.

<u>1 முதல் 8 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>

6. இறந்துப்போன பால்பாண்டியின் வீட்டில் அருகில் வசித்து வருகிறேனா என்றால் 4 தெருக்கள் தள்ளி வசித்து வருகிறேன். பால்பாண்டி ராஜாவிடம் எவ்வளவு பணம் வாங்கினார் என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். பணம் கொடுத்தாரா என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் சம்பவத்திற்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு குளக்கரையில் வைத்து பால்பாண்டியை அடித்துவிட்டார் என்றும், அதன்பின்னர் வீட்டிற்கு இரவு 1 மணிக்கு ராஜா வந்தப்போது எனது கணவர் ராஜேந்திரன் காலையில் பேசிக்கொள்ளலாம் என்று கூறியதையும், மறுநாள் காலை நானும் எனது கணவரும் வீட்டில் இருந்தப்போது ராஜா வீட்டிற்கு அலைபேசியில் அவர் வீட்டிற்கு தகவல் சொல்லி, ராஜாவின் அண்ணனும், மகனும் ராஜாவை அழைத்து சென்ற விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை.

7. எனது தம்பி இறந்த விபரம் தெரிந்து மறுநாள் காலையில் சென்று பார்த்தேன் என்றால் சரிதான். ராஜா வழக்கு தாக்கல் செய்த விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் எனது தம்பி பால்பாண்டி சொல்லி தெரியும். எனக்கு எந்த விபரமும் தெரியாது என்றால் சரியல்ல. சின்னப்பாண்டி எனக்கு என்ன உறவுமுறை வேண்டும் என்றால் தம்பியாவார். சின்னப்பாண்டி தூண்டுதலின் பேரில் எதிரிகளுக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>9 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** – 1 முதல் 8 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை 9 வது எதிரி தரப்பினர் அப்படியே ஏற்றுக்கொள்கிறார்.

**<u>மறு விசாரணை</u>** :– இல்லை

**திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று** 06.03.2026 **அன்று வெள்ளிக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.**

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.03.06 18:16:08 +0530

**கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.**
06.03.2026

2026 மார்ச் மாதம் 06– ஆம் தேதி வெள்ளிக்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 136/2025

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06– ஆம் தேதி வெள்ளிக்கிழமை

திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW5 – பேச்சியம்மாள் |
| கணவர் பெயர்: | முத்தையா தேவர் |
| ஊர்: | மாரியம்மன்கோவில்பட்டி |
| வட்டம்: | போடிநாயக்கனூர் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | இல்லத்தரசி |
| வயது : | 70 |

06.03.2026

(எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர். 5 வது எதிரி ஆஜர் இல்லை, பிரிவு 355 BNSS –ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அடையாளம் காணப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்சமயம் தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் தாலுகா, மாரியம்மன்கோவில்பட்டியில் வசித்து வருகிறேன். நான் வீட்டில் இருந்து வருகிறேன். எனது மகன் பால்பாண்டி இறந்தது சம்பந்தமாக நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அவர் பால்வியாபாரம் செய்து வந்தார். பால்வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டது. பழனிச்செட்டிப்பட்டியில் உள்ள ராஜா என்பவரிடம் எனது மகன் ரூ.2 லட்சம் கடன் வாங்கியதாக என்னிடம் சொன்னார். எனது மகன் இறப்பதற்கு சுமார் 6 மாதங்களுக்கு முன்பு வரவு செலவு ராஜாவுடன் இருந்தது. வரவு செலவு பற்றி எனக்கு தெரியாது.

2. ராஜாவை மட்டும் தான் தெரியும். பால்பாண்டி இறப்பதற்கு முன்பு ஒரு மாதத்திற்கு முன்பு ராஜாவுடன் 6 நபர்கள் எங்கள் வீட்டிற்கு வந்தார்கள். நான் பால்பாண்டியுடன் தான் வசித்து வந்தேன். வந்த நபர்கள் சத்தம் போட்டார்கள். சத்தம் கேட்டவுடன் எனது மருமகள் சரோஜா வந்தார். அதிகமாக சத்தம் போட்டார்கள், அப்போது எனது மகன் சின்னப்பாண்டி ஓடிவந்தார், அப்போது பிரச்சனை அதிகமானது, சின்னப்பாண்டி எதற்கு பிரச்சனை செய்கிறீர்கள் என்று கேட்டதற்கு பால்பாண்டி அவரையும், என்னையும் தடுத்தார்.

3. என்ன பிரச்சனை என்று நான் பால்பாண்டியிடம் கேட்டப்போது, வாங்கிய பணத்தை திருப்பிக்கொடுத்துவிட்டதாகவும், அதற்கு ரூ.80 லட்சத்தை கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதாக பால்பாண்டி என்னிடம் சொன்னார். வந்த நபர்கள் இருதரப்பினரையும் விலக்கிவிட்டார்கள். விலக்கிவிட்டவுடன் ராஜாவுடன் வந்தவர்கள் சென்றுவிட்டார்கள். அதன்பின்பு சுமார் 3 நாட்கள் கழித்து எனது மகன் வெளியில் சென்று மருத்து குடித்துவிட்டு வீட்டிற்கு வந்து, மருந்து குடித்துவிட்டதாக கூறினார்.

4. நானும், எனது மருமகள் பாண்டியம்மாள் ஆகியோர் பால்பாண்டியை தேனி, க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். சிகிச்சை அளிக்கப்பட்டதில் சிகிச்சை பலனின்றி எனது மகன் இறந்துவிட்டார். எனது மகன் சின்னப்பாண்டிக்கு பால்பாண்டி இறந்த விபரம் தெரியாது. பிரேத பரிசோதனை செய்து முடித்த பின்பு வந்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1 முதல் 8 வரையிலான எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>

5. கூட்டுக்குடும்ப சொத்து சம்பவத்திற்கு முன்பு பாகப்பிரிவினை செய்யப்பட்டது என்றால் சரிதான். எனது மகன் பால்பாண்டி பூர்வீக வீட்டை இடித்து புதிதாக இரண்டு மாடி வீடு கட்டினார் என்றால் சரிதான். எனது மகன் பால்பாண்டி பால்பண்ணை வைத்து வியாபாரம் செய்து வந்தார் என்றால் சரிதான். அதில் நல்ல வருமானம் வந்தது என்றால் சரிதான். பாகப்பிரிவினையில்பால்பாண்டிக்கு ஒதுக்கப்பட்ட நிலங்களில் யார் விவசாயம் வந்து வந்தார்கள் என்றால் நான் மாட்டிற்காக புல் வளர்த்தேன்.

6. பால்பாண்டி இறப்பதற்கு முன்னர் ராஜா பால்பாண்டி மீது நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. பால்பாண்டி இறந்த பின்பு நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை எனக்கு வந்தது என்றால் சரியல்ல. பால்பாண்டி வாங்கிய கடனை எப்படி முடித்தார்கள் என்றால் எனது மருமகள் எனது மகனின் சொத்தை விற்று கடன் அடைத்ததாக சொன்னார். இறந்துபோன எனது மகன் பால்பாண்டியின் பாகத்தில் எனது பங்கிற்கு ரூ.30 லட்சம் பணத்தை பெற்றுக்கொண்டேன் என்றால் சரியல்ல.

7. எனது பால்பாண்டி வீட்டில் தற்போது எனது மகன் சின்னப்பாண்டி வாழ்ந்து வருகிறார் என்றால் சரியல்ல, நான் வாடகைக்கு விட்டுள்ளேன். பால்பண்ணை சம்பந்தப்பட்ட ரூ.2 லட்சம் மதிப்பிலான பொருட்கள் சின்னப்பாண்டி வைத்துள்ளார் என்றால் இல்லை, என்னிடம் உள்ளது. பால்பாண்டியின் மனைவியை நாங்கள் அடித்து துரத்திவிட்டோம் என்றால் சரியல்ல, அவராகவே சென்றுவிட்டார்.

8. பால்பாண்டி உயிருடன் இருக்கும்வரையில் அவருடன் எந்த பேச்சுவார்த்தையும் நாங்கள் செய்யவில்லை என்றாலும், அவர் இறந்த பின்னர் அவர் வாங்கிய கடனை மோசடி செய்வதற்காகவும், சொத்துக்களை அபகரிப்பதற்காகவும், நானும், எனது மகன் சின்னப்பாண்டியும் சேர்ந்து கொண்டு பொய் சாட்சியம் அளிக்கிறோம் என்றால் சரியல்ல. போலீசார் என்னை விசாரிக்கும்போது, சம்பவம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். போலீசார் என்னிடம் கேட்கவும் இல்லை, நான் சொல்லவும் இல்லை. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>**9 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**</u> – 1 முதல் 8 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை 9 வது எதிரி தரப்பினர் அப்படியே ஏற்றுக்கொள்கிறார்.

<u>**மறு விசாரணை**</u> :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 06.03.2026 அன்று வெள்ளிக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.03.06 18:16:16 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
06.03.2026

2026 மார்ச் மாதம் 06– ஆம் தேதி வெள்ளிக்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 136/2025

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06– ஆம் தேதி வெள்ளிக்கிழமை திருமதி.ட.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW6 – சுரேஷ்ராஜா |
| தகப்பனார் பெயர்: | மாயத்தேவர் |
| ஊர்: | மாரியம்மன்கோவில்பட்டி |
| வட்டம்: | போடிநாயக்கனூர் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | Electrician |
| வயது : | 48 |

06.03.2026

(எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர். 5 வது எதிரி ஆஜர் இல்லை, பிரிவு 355 BNSS –ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அவரது ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

நான் தற்சமயம் தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் தாலுகா, மாரியம்மன்கோவில்பட்டியில் வசித்து வருகிறேன். நான் Electrician–ஆக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். இறந்துபோன பால்பாண்டியை எனக்கு தெரியும். நான் கோயம்புத்தூர், பொள்ளாச்சியில் வேலை பார்த்து கொண்டிருந்த போது, எனது மனைவி எனக்கு தொலைபேசி மூலமாக தொடர்பு கொண்டு, பால்பாண்டி வயிற்றுவலி காரணமாக மருந்து குடித்து இறந்துவிட்டதாக என்னிடம் சொன்னார். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>சாட்சி அரசு தரப்பில் பிறழ்சாட்சியாக கருதப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

பால்பாண்டி என்பவர் பால்வியாபாரம் செய்து வந்ததில் வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டதாகவும், அதற்காக பால்பாண்டி எதிரிகளிடம் கடன் வாங்கியதாகவும், கடனிற்காக எதிரிகள் பால்பாண்டியிடம் அதிகப்படியான வட்டி கேட்டதாகவும், கடனை திருப்பி கேட்டு எதிரிகள் பால்பாண்டியிடம் கேட்டு தொல்லை செய்ததாகவும், அவர் வசித்து வந்த வீட்டை காலி செய்யுமாறு கடனிற்காக சொன்னதாகவும், கடந்த 08.03.2015 ம் தேதி மாலை 3.30 மணிக்கு அவர் குடியிருந்த வீட்டில் விவசாயத்திற்கு பயன்படுத்தி வந்த பூச்சிக்கொல்லி மருந்தை குடித்துவிட்டதால், அவரை தேனி, க.விலக்கு அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்த்துவிட்டதாகவும், சிகிச்சை பலனின்றி 5.20 மணியளவில் பால்பாண்டி இறந்துவிட்டதாகவும், பால்பாண்டிக்கு பணம் கொடுத்தவர்கள் அதிகப்படியான வட்டிக் கேட்டு அவரை தொந்தரவு செய்ததாகவும், அவர் எதிரிகளின் தொந்தரவு செய்ததால் தான் அவர் தற்கொலை செய்துக்கொண்டார் என்று போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு, எதிரிகள் எனது பக்கத்து ஊர்க்காரர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக தற்போது மாற்றி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>** :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 06.03.2026 அன்று வெள்ளிக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.03.06 18:16:22 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
06.03.2026

2026 மார்ச் மாதம் 06– ஆம் தேதி வெள்ளிக்கிழமை

கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி

S.C. நெம்பர் : 136/2025

2026–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 06– ஆம் தேதி வெள்ளிக்கிழமை திருமதி.டீ.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW7 – சரோஜா |
| கணவர் பெயர்: | சின்னப்பாண்டி |
| ஊர்: | மாரியம்மன்கோவில்பட்டி |
| வட்டம்: | போடிநாயக்கனூர் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | இல்லத்தரசி |
| வயது : | 52 |

06.03.2026

(எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர். 5 வது எதிரி ஆஜர் இல்லை, பிரிவு 355 BNSS –ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அடையாளம் காணப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் தாலுகா, மாரியம்மன்கோவில்பட்டியில் வசித்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக இருந்து வருகிறேன். அ.சா.3 சின்னப்பாண்டி எனது கணவர் ஆவார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியுமா என்றால் எதிரி ராஜாவை மட்டும் தெரியும், மற்றவர்களை தெரியாது. இறந்துபோன பால்பாண்டி எனது கொழுந்தன் ஆவார். 2015 ம் ஆண்டு மூன்றாவது மாதம் 08 ம் தேதி பால்பாண்டி இறந்துவிட்டார். பால்பாண்டி பால்வியாபாரம் செய்து வந்தார், வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டதால்,

ராஜாவிடம் ரூ.2 லட்சம் கடனாக பெற்றிருந்தார், வாங்கிய பணத்தை பால்பாண்டி ராஜாவிடம் திருப்பிக்கொடுத்துவிட்டார்.

2. கடனிற்கு ஈடாக பால்பாண்டி பத்திரம் எழுதிக்கொடுத்திருந்தார், பணத்தை திருப்பி செலுத்திவிட்டதால் எழுதிக்கொடுத்த பத்திரத்தை திருப்பி பால்பாண்டி கேட்டார். ஆனால் ராஜா திரும்ப கொடுக்கவில்லை. ராஜா, மணிமாறன் மற்றும் 8 நபர்கள் ஆகியோர்கள் வீட்டிற்கு வந்து தகாத வார்த்தைகளால் திட்டி, பிரச்சனை செய்து, வந்தார்கள். ராஜா, மணிமாறன், உடன் வந்த மற்ற நபர்களில் 7 நபர்கள் தற்போது நீதிமன்ற ஆஜரில் உள்ளவர்கள் தான் பிரச்சனை செய்தவர்கள் ஆவார்கள்.

3. அதனால் பால்பாண்டிக்கு மிகவும் மன உளைச்சல் ஏற்பட்டது, அதை எங்களிடம் வந்து கூறுவார், நாங்கள் சமாதானம் செய்து அறிவுரை கூறி அனுப்பி வைப்போம். 08.03.2015ம் தேதி காலை 8, 9 மணியளவில் ராஜா, மணிமாறன் மற்றும் 6 நபர்கள் வந்து பால்பாண்டி வீட்டில் வந்து, பால்பாண்டியிடம் பணத்தை கொடுத்துவிடு என்று அசிங்கமாக திட்டி, இல்லையென்றால் மருந்தை குடித்து செத்துவிடு என்று மிரட்டினார்கள். நீதிமன்றத்தில் ரூ.85 லட்சம் பணம் கேட்டு வழக்கு எதிரி ராஜா என்பவர் வழக்கு தாக்கல் செய்த பின்பு பால்பாண்டி மிகவும் மன உளைச்சலுக்கு ஆளானார். அன்றைய தினம் மாலை 3.00 மணியளவில் பால்பாண்டி மருந்து குடித்துவிட்டார்.

4. பால்பாண்டியின் மனைவி நான் வீட்டில் இருந்தப்போது என்னிடம் வந்து பால்பாண்டி மருந்து குடித்துவிட்டதாக கூறினார். பின்னர் 108 ஆம்புலன்ஸ் வந்து அவரை தேனி, க.விலக்கு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றார்கள். அதன்பின்னர் அவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். நாங்கள் தேனி, க.விலக்கு அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்தோம், நாங்கள் பார்த்த ஒருமணிநேரம் கழித்து பால்பாண்டி இறந்துவிட்டார். எதிரிகள் பால்பாண்டியின் வீட்டிற்கு வந்து பிரச்சனை செய்யும்போது நான் இருந்தேன்.

எதிரிகள் தொடர்ந்து பிரச்சனை செய்து வந்ததால் மன உளைச்சலின் காரணமாக பால்பாண்டி மருந்து குடித்து இறந்துவிட்டார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>1 முதல் 8 வரையிலான எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>

5. போலீசார் என்னை விசாரிக்கும்போது, பால்பாண்டி இறந்த தேதியன்று காலை 9 மணிக்கு வீட்டிற்கு வந்து பிரச்சனை செய்ததாக சொன்னேனா என்றால் தெரியாது. நான் அந்த சமயத்தில் வீட்டில் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் வந்து சத்தம் போடும்போது நான் அங்கு இல்லை என்றால் சரியல்ல, நான் வந்து பார்த்தேன். நான் மில் வேலைக்கு சென்றிருந்தேன் என்றால் இல்லை, வீட்டில் தான் இருந்தேன். எனது வீட்டிற்கும் பால்பாண்டி வீட்டிற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 10 வீடுகள் தள்ளி இருக்கும்.

6. ராஜா பால்பாண்டிக்கு எவ்வளவு பணம் கொடுத்தார் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல, பால்பாண்டி சொல்லி எனக்கு தெரியும். பால்பாண்டிக்கும், எனது கணவருக்கும் இடையே சொத்துக்களை பிரித்துக்கொண்டோம் என்றால் சரிதான். எனது கணவர் சின்னப்பாண்டி என்ன செய்து வருகிறார் என்றால் பால் வியாபாரம் செய்து வருகிறார். எனது குடும்பத்திற்கும் பால்பாண்டி குடும்பத்திற்கும் பேச்சுவார்த்தை இல்லை என்றால் சரியல்ல. பால்பாண்டி இறக்கும்வரை எதிரிகள் மீது புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் எனக்கு தெரியாது.

7. எதிரிகள் பிரச்சனை செய்யும்போது எதிரிகள் மீது நானும், எனது கணவரும் புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். பால்பாண்டி இறந்தப்பின்னர் பால்பாண்டியின் பால்பண்ணையில் இருந்த ரூ.2 லட்சம் மதிப்பிலான பொருட்களை எனது கணவர் எடுத்துக்கொண்டார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. பால்பாண்டி வசித்து வந்த வீட்டில் தற்போது எனது மகன் வசித்து வருகிறார் என்றால் பால்பாண்டி ஒத்திக்கு கொடுத்ததை எனது

மகன் மீட்டு, அவர் வசித்து வருகிறார். அவ்வாறு பால்பாண்டி ஒத்திக்கு விடவில்லை என்றாலும், நான் எனது கணவர், மாமியார் ஆகியோர் சேர்ந்து பால்பாண்டியின் மனைவியை விரட்டிவிட்டோம் என்றால் சரியல்ல, அவராகவே சென்றுவிட்டார்.

8. பால்பாண்டி இறந்த பின்னர் பால்பாண்டி பாகத்தில் எனது மாமியார் பாகத்திற்கு ரூ.30 லட்சம் எனது மாமியார் வாங்கினார் என்றால் சரிதான். பால்பாண்டிக்கு இரண்டு பிள்ளைகள் உள்ளார்கள் என்றால் சரிதான். பால்பாண்டி இறப்பதற்கு முன்பு எதிரிகள் தாக்கல் செய்த வழக்கு பற்றி எனக்கு தெரியும் என்றால் கேள்விப்பட்டேன். மேற்படி வழக்கு எவ்வாறு முடிக்கப்பட்டது என்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். பால்பாண்டி வயிற்றுவலி காரணமாக மருந்து குடித்து இறந்துவிட்டார் என்றால் சரியல்ல.

9. எனக்கும் பால்பாண்டி குடும்பத்திற்கும் எந்த பேச்சுவார்த்தையும் கிடையாது என்றால் சரியல்ல. பால்பாண்டி இறந்தவுடன் எனது கணவர் பால்பாண்டி வாங்கிய கடனை மோசடி செய்ய வேண்டும் என்பதற்காகவும், பால்பாண்டி பாகத்தை அபகரித்துக்கொள்வதற்காகவும், பால்பாண்டியின் மனைவியை வெளியில் செல்லக்கூடாது என்று எங்கள் கட்டுப்பாட்டுக்குள் இருக்க வேண்டும் என்று வற்புறுத்தியதாகவும், பொய் புகார் கொடுத்து அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் கொடுத்த பணத்திற்காக நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளதால் பால்பாண்டியிடம் பணத்தை கேட்க வேண்டிய அவசியமில்லை என்றால் சரியல்ல.

10. எதிரிகள் மணிமாறன், அருள்வாசகம், மொக்கைப்பாண்டி ஆகியோர் எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், கடனும் கொடுக்கவில்லை என்றாலும், எதிரிகளின் பெயர்களை தவறாக பயன்படுத்தி அவர்களிடமிருந்து பணம் பறிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன்

என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல.

**<u>9 வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>** – 1 முதல் 8 எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை 9 வது எதிரி தரப்பினர் அப்படியே ஏற்றுக்கொள்கிறார்.

**<u>மறு விசாரணை</u>** :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 06.03.2026 அன்று வெள்ளிக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.03.06 18:16:32 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
06.03.2026